# முதல்வரின் ‘மினி பேருந்து’ திட்டம்! ... முதல் பக்கத் தொடர்ச்சி

அந்த அறிவிப்பின்படி, 25 கி.மீ. தூரத்திற்கு மினி பஸ் இயக்கப்படும் என்றும் முக்கிய அரசு அலுவலகங்கள், மருத்துவமனைகள் போன்ற இடங்களுக்குச் சென்று பொதுமக்களை இறக்கிவிட ஏதுவாக மேலும் 1 கிலோ மீட்டர் தூரம் வரை மினி பஸ்களை இயக்கிடவும் வழிவகை செய்யப்பட்டது. இதன்படி, 3,103 வழித்தடங்களில் உள்ள 90 ஆயிரம் கிராமப்புறங்களில் வசிக்கும் ஏறத்தாழ 1 கோடி மக்கள் பயன்பெறத்தக்க வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இத்திட்டத்தினை 16.6.2025 அன்று தஞ்சாவூரில் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்கள்.

இதுவரை, பேருந்துகளை தங்கள் கிராமத்தில் காணாத பொதுமக்கள் எல்லாம் கண்டு மகிழ்ந்து பரவசம் அடையும் வகையில் மினி பேருந்துகள் கிராமப்புறங்களில் பயணிக்கத் தொடங்கிவிட்டன. இந்த மினி பஸ் தங்களுடைய கிராமத்திற்கு வந்ததும் மூதாட்டி ஒருவர் தரையில் விழுந்து தலைவணங்கி பேருந்தை வரவேற்றார். வேறு சிலர் பேருந்து வந்த வழித்தடத்தில் கற்பூரம் ஏற்றி மகிழ்ந்து வரவேற்று மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.

**திருத்தணியிலிருந்து தும்பிக்குளத்திற்குப் புதிதாக இயக்கப்பட்ட மினி பஸ்ஸில் பயணம் செய்த ஒரு பெண், “நான் தும்பிக்குளம் கிராமத்தில் வசித்து வருகிறேன். விவசாயக் கூலி தொழிலாளியான நான், நாள்தோறும் வேலைக்குச் செல்லும்போது பஸ் வசதி இல்லாததால், நடந்தே வேலைக்குச் சென்று அவதிப்பட்டு வந்தேன். தற்போது மினி பஸ் சேவை தொடங்கியிருப்பதால், இதில், பாதுகாப்பாக வேலைக்குச் சென்று மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். எங்கள் கிராமத்திற்கு மினி பஸ் திட்டத்தைச் செயல்படுத்திய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுள்ளார்.**

பவானி என்னும் மாணவி தெரிவிக்கையில் “திருத்தணியில் மேல்நிலைப் பள்ளியில் +2 படிக்கிறேன். நான் பள்ளி செல்வதற்கு பஸ் வசதி இல்லாததால், நாள்தோறும் பள்ளிக்குச் செல்வதற்குச் சிரமம் ஏற்பட்டது. தற்போது எங்கள் ஊருக்கு மினி பஸ் வருவதால், நான் பள்ளி செல்வதற்கு மிகவும் வசதியாக இருக்கிறது” என்று மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

கூடுவாஞ்சேரி பஸ் நிலையத்திலிருந்து நெல்லிக்குப்பம் வரை செல்லும் மினி பஸ்ஸில் பயணம் செய்த கன்னிவாக்கத்தைச் சேர்ந்த வரதராஜன், “எங்கள் ஊருக்கு போக்குவரத்து வசதி கிடையாது. நாங்கள் இரு சக்கர வாகனங்களிலோ, ஆட்டோ பிடித்தோ அதிக செலவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தில் இதுவரை இருந்தோம். தற்போது எங்கள் கிராமத்திற்கு மினி பஸ் வருவதால், எங்கள் சிரமம் குறைந்து, செலவினம் குறைந்து மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். இத்திட்டத்தை நடைமுறைபடுத்தியுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு எங்களுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்” என்று குறிப்பிட்டார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்துள்ள இந்த மினி பஸ் திட்டத்தால், இவர்களைப் போல ஏறத்தாழ 1 கோடி மக்கள் மினி பஸ்ஸில் பயணம் செய்து அளவில்லாத மகிழ்ச்சி அடைகிறார்கள். இத்திட்டம் பொது மக்களிடையே பெருத்த வரவேற்பைப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

---




# தி.மு.க. இளைஞர் அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### திருச்சி மத்திய மாவட்டச் செயலாளர் க.வைரமணி அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு திருச்சி மத்திய மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–நகரம்–பகுதி–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பகுதி / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 22.06.2025 | லால்குடி தெற்கு ஒன்றியம் | சாத்தமங்கலம் | த.இராதாகிருஷ்ணன்<br>ரா.சிந்துநதி |
| 2 | | லால்குடி மத்திய ஒன்றியம் | சிவன்கோவில், மாந்துறை. | த.இராதாகிருஷ்ணன்<br>ரா.சிந்துநதி |
| 3 | 23.06.2025 | லால்குடி நகரம் | லால்குடி ரவுண்டானா | சீனி விடுதலை அரசு<br>ந.காருண்யா |
| 4 | | பூவாளுர் பேரூர் | பங்குனிப்பாலம் | சீனி விடுதலை அரசு<br>ந.காருண்யா |
| 5 | 24.06.2025 | புள்ளம்பாடி தெற்கு ஒன்றியம் | ஆலம்பாக்கம் | ஆடுதுறை உத்திராபதி<br>ஐ.பாலகணபதி |
| 6 | | புள்ளம்பாடி வடக்கு ஒன்றியம் | கீழரசூர் | ஆடுதுறை உத்திராபதி<br>ஐ.பாலகணபதி |
| 7 | 27.06.2025 | லால்குடி வடக்கு ஒன்றியம் | செம்பரை | திருச்சி கருணாமூர்த்தி<br>இரா.கனிமொழி |
| 8 | 28.06.2025 | புள்ளம்பாடி பேரூர் | உதயம் நகர் | லாயோலா ராஜசேகர்<br>அ.விஜயலட்சுமி |
| 9 | | கல்லக்குடி பேரூர் | பேருந்து நிலையம், கல்லக்குடி. | லாயோலா ராஜசேகர்<br>அ.விஜயலட்சுமி |
| 10 | 29.06.2025 | திருவரங்கம் பகுதி | மேலூர் | நாமக்கல் இராஜகோபால்<br>சி.மில்லர் மண்டேலா |
| 11 | | திருவானைக்கோவில் பகுதி | திருவளர்சோலை | பவித்ரம் கண்ணன்<br>ந.காருண்யா |
| 12 | 02.07.2025 | மணிகண்டம் ஒன்றியம் | இனாம்குளத்தூர் | சீனி விடுதலை அரசு<br>சி.மில்லர் மண்டேலா |
| 13 | | மணப்பாறை கிழக்கு ஒன்றியம் | முத்துடையான்பட்டி | ஆடுதுறை உத்திராபதி<br>சை.ஷேக் அலிமாஸ் அலி |
| 14 | 05.07.2025 | அந்தநல்லூர் ஒன்றியம் | கடைவீதி, ஜீயபுரம். | சீனி விடுதலை அரசு<br>ப.வெங்கடேஷ் |
| 15 | | சிறுகமணி பேரூர் | பெட்டவாய்த்தலை | ஆடுதுறை உத்திராபதி<br>சை.ஷேக் அலிமாஸ் அலி |
| 16 | 06.07.2025 | உறையூர் பகுதி | அரசமரத்தடி, பாண்டமங்கலம். | லாயோலா ராஜசேகர்<br>ப.வெங்கடேஷ் |
| 17 | | தில்லைநகர் பகுதி | புத்தூர் மந்தை | லயோலா ராஜசேகர்<br>ந.காருண்யா |
| 18 | 12.07.2025 | காஜாமலை பகுதி | ராமசந்திரா நகர் | சீனி விடுதலை அரசு<br>அ.விஜயலட்சுமி |
| 19 | 13.07.2025 | அண்ணாநகர் பகுதி | ஆழ்வார்தோப்பு, காயிதே மில்லத் நகர். | நாமக்கல் இராஜகோபால்<br>சி.ஷாலினி |
| 20 | | பொன்னகர் பகுதி | காமராஜர் மன்றத் தெரு | பவித்ரம் கண்ணன்<br>ரா.சிந்துநதி |

திருச்சி
நாள் : 20.06.2025

கலைஞர் 100 1924 - 2023




---

மாநகர் போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்றச் சங்கம்

# தலைமைச் சங்க நிர்வாகிகள் பட்டியல்

## தலைமைக் கழக அறிவிப்பு!

மாநகர் போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண். 605/MDS, பேரவை இணைப்பு எண். 287) தலைமைச் சங்க நிர்வாகிகளாக கீழ்கண்டவர்கள் தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்படுகிறது.

**தலைமைச் சங்க நிர்வாகிகள் பட்டியல்**

தலைவர் - பிடிசி எஸ். ரவி (எ) சிவக்குமார்

பொதுச் செயலாளர் - த. ஆறுமுகம்

பொருளாளர் - எம். பெருமாள்

மத்திய சங்கத்தின் இதர நிர்வாகிகள் மற்றும் பணிமனை வாரியாக நிர்வாகிகள் பட்டியல் தலைமைக் கழகத்தால் பின்னர் அறிவிக்கப்படும்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18,
நாள் : 21.6.2025

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

---

கிண்டி அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில்

# மாணவிகள் நேரடி சேர்க்கை!

## கட்டணமில்லா பயிற்சி!

*சென்னை, ஜுன் 22-*

*கிண்டி அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் பெண்கள் சேர்க்கை நடைபெறுகிறது. இதில் பெண்கள் சேர்ந்து பயனடைய முதல்வர் என்.சுப்பிர மணி கேட்டுக் கொண்டுள்ளார்.*

*இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-*

*அரசினர் தொழிற்பயிற்சி நிலையம்(மகளிர்) கிண்டியில், 2025-26ஆம் கல்வி ஆண்டிற்கான காலியிடங்களுக்கான நேரடி சேர்க்கையானது 19.06.2025 முதல் துவங்கியுள்ளது. எனவே 10ஆம் வகுப்பு தேறியவர்கள்/ தோல்வியுற்றவர்கள்/, இடை நின்றவர்கள் மற்றும் 12ஆம் வகுப்பு தேறியவர்கள் /தோல்வியுற்றவர்கள் ஓர் ஆண்டு/இரண்டு ஆண்டு தொழிற்பிரிவுகளில் சேர்ந்து பயிற்சி பெறலாம். பயிற்சியை முடித்தவுடன் 100 சதவீத வேலைவாய்ப்பு.. பெண்களுக்கு வயது உச்ச வரம்பு இல்லை. பயிற்சியின் போது அரசால் வழங்கப்படும் சலுகைகள் விலையில்லா மிதிவண்டி, விலையில்லா பாடப்புத்தகம், விலையில்லா சீருடை 2 செட் தையல் கூலியுடன், விலையில்லா காலணி, இலவச பேருந்து மற்றும் இரயில் பயணச் சலுகை, மாதாந்திர உதவித் தொகை ரூ.750/ தகுதியுள்ள மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் உதவித்தொகை ரூ.1000/, இலவச அடையாள அட்டை ஆகியவை அரசால் வழங்கப்படுகிறது.*

*இவ்வாறு அவர் தமது செய்திக் குறிப்பில் கூறியுள்ளார்.*

---

# பல்லடத்தில் புதிய கட்டிடம்!

திருப்பூர், ஜூன் 22 –

திருப்பூர் மாவட்டம், பல்லடம் ஒன்றியம், கணபதிபாளையம் அரசு மேல்நிலைப் பள்ளியில் ‘நம்ம ஸ்கூல் நம்ம ஊரு பள்ளி’ திட்டத்தின் கீழ் திருப்பூர் ரவுண்ட் டேபிள் 116 மற்றும் திருப்பூர் லேடீஸ் சர்க்கிள் 44 அமைப்பின் சார்பில் 1 கோடியே 40 லட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட 10 வகுப்பறைகளை மாணவர்களின் பயன்பாட்டிற்காக பள்ளி நிர்வாகத்திடம் ஒப்படைக்கும் விழா பல்லடம் கிழக்கு ஒன்றிய செயலாளர் நா.சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. இதில் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

---

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## இராம. நாராயணன்

### ஜுன் 22 (2014)



**கழகக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்ட காரணத்தால், கழகம் ஆட்சிப் பொறுப்பில் இல்லாத காலத்திலும், பல்வேறு எதிர்ப்புகள், நெருக்கடிகள் இருந்தபோதும், கழக கொள்கைகளை தனது திரைப்படங்கள் மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தவர்.**

**1989ஆம் ஆண்டு காரைக்குடி சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு, வெற்றி பெற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**தனது வாழ்நாளின் ஆரம்பம் முதல் இறுதி வரை கழகத்தின்பால் முழுஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

தலைமைக் கழகம்
தி.மு.க.

---

# தேவகோட்டையில் கலைஞர் 102வது பிறந்த நாள் பொதுக்கூட்டம்!

## கே.ஆர்.பெரியகருப்பன் - மு.தென்னவன் - தமிழன் பிரசன்னா சிறப்புரை!

*சிவகங்கை, ஜுன் 22-*

*சிவகங்கை மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் கழகத்தின் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழா கடந்த இரண்டு மாதங்களாக சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது. அதன் தொடர்ச்சியாக தேவகோட்டை நகர கழகத்தின் சார்பில் இன்று 22ம்தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி அளவில் தேவகோட்டை அண்ணா அரங்கில் 102வது பிறந்தநாள் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.*

*இந்த பொதுக்கூட்டம் நகர் கழக செயலாளர் பெரி.பாலா என்ற பாலமுருகன் தலைமையில் நடைபெறுகிறது.*

*மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் செல்வராஜ் வரவேற்று பேசுகிறார். பொதுக் கூட்டத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் கே.ஆர். பெரியகருப்பன், முன்னாள் அமைச்சர் மு. தென்னவன், தலைமை கழக பேச்சாளர் தமிழன் பிரசன்னா ஆகியோர் சிறப்புரையாற்றுகிறார்கள்.*

*இந்த கூட்டத்தில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொள்கிறார்கள்.*

*நகர் இளைஞர் அணி அமைப்பாளர் அரவிந்த் நன்றி கூறுகிறார்.*

*கூட்டத்திற்கான ஏற்பாடுகளை நகர்கழக செயலாளர் பெரி. பாலா தலைமையில் நகர் கழக நிர்வாகிகள் செய்து வருகிறார்கள்.*

---

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து

## தலைமைக் கழக அறிவிப்பு!

வேலூர் மாவட்டம், கணியம்பாடி தெற்கு ஒன்றியம், பென்னாத்தூர் பேரூரைச் சேர்ந்த ஜி.நாகலிங்கம், கே. சரத்பாபு, ஏ.சிவராஜ், பி.கே.எஸ்.சந்தோஷ் ஆகியோர், தங்களது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18,
நாள் : 21.6.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---





விழுப்புரம் வடக்கு மாவட்டம் தி.மு.க. சார்பில் செஞ்சியில் நடைபெற்ற மண் மொழி மானம் காக்க ஓரணியில் தமிழ்நாடு கழகப் புதிய உறுப்பினர் சேர்க்கை அவசர ஆலோசனைக் கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. சிறப்புரை ஆற்றி அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளிடம் புதிய உறுப்பினர் சேர்க்கை படிவங்களை வழங்கினார். உடன் மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், தொகுதி பார்வையாளர்கள் செஞ்சி கார்த்திகேயன், மயிலம் இள புகழேந்தி,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், செந்தமிழ்ச்செல்வன், தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட துணை செயலாளர்கள் ரவிக்குமார், அருணகிரி, அமுதா ரவிக்குமார், செயற்குழு உறுப்பினர்கள் விஜயகுமார், நெடுஞ்செழியன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த் ஆகியோர் உள்ளனர்.